[1979 ஏப்ரல் 21

இணைப்பு I

[976ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 772-க்கான விடையைக் காண்க]

விடை.

அ) 8·5 சதவீதம் சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்புக்கு 1978—79-ம் பருவத்தில் குறைந்தபட்ச சட்டபூர்வ விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 100/- என மைய-அரசு நிர்ணயித்துள்ளது. சென்ற ஆண்டு இதே சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்புக்கு விலை டன் ஒன்றுக்கு ரூ. 85/- என மைய அரசு நிர்ணயித்து இருந்தது. ஒரு குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு தல வரிகள் நீங்கலாகச் சராசரியாக ரூ. 203 ஆகிறது. ஆனால் ஒரு மூட்டை சர்க்கரைக்கு இன்றைய மார்க்கட் நிலவரப்படி கிடைக்கும் தொகை ரூ. 180/- ஆகும். இதில் 15 சதவீதம் காப்பு மற்றும் பழைய இழப்புகளுக்கு ஈடுசெய்தது போக வங்கிகள் அளிக்கும் பணம் சராசரியாக ரூ. 153/- ஆகும். இதனால் கரும்பு விலையினை முழுமையாகக் கொடுக்க இயலவில்லை. இதனைக் கருத்தில்கொண்டு மைய அரசுக்குக் கடன் நிதி உதவி கோரி மைய அரசின் துணைப் பிரதமர் மற்றும் நிதி அமைச்சருக்குக் கடிதம் எழுதப் பட்டுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டுகளில் கொடுக்கப்படவேண்டிய கரும்பு விலையில் நிலுவை ரூ. 4½ கோடி அல்ல. 31-1.79-ம் தேதி அளவில் பழைய ஆண்டுகளில் கொடுக்கவேண்டிய விலையில் நிலுவை ரூ. 68.17 இலட்சங்களாகும். கரும்பு விலையினை கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966-ன்படி 14 நாட்களுக்குள் அளித்திடல் வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறும் ஆலைகள் ஆண்டுக்கு 15 சதவீதம் வட்டி அளித்திட வேண்டும்.

இணைப்பு II.

[992ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

தொழில்துறை கொள்கைக் குறிப்பு.

கிராமப் புறங்களிலும் பிற்பட்ட பகுதிகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற அரசுக் கொள்கையின் அடிப்படையில், மற்ற துறைகளில் போலவே தொழில் துறையிலும் இப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. குறுகிய காலத்தில் அதிக அளவில் வேலை வாய்ப்புக் களை உருவாக்கும்போது இரண்டு கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. முதற்கண் எல்லோருக்கும் தொழில் நுட்பத் திறனை அளிக்க வேண்டுமானால் ஏராளமான பயிற்சித் ட்டங்களுக்காக பெருஞ் செலவு ஆவதுடன் காலமும்